**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | CC 416/ 2025 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 2 |

| | | |
|---|---|---|
| Name | : | அழகேசன் |
| Father’s Name | : | ராமசாமி |
| Village | : | ரங்கநாதபுரம் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | சிற்பி |
| Religion | : | இந்து |
| Age | : | 45 |
| ACCUSED | சடையப்பன் ஆஜர். | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.09.2025.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ரங்கநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோவில்களில் கல்லில் சிலை வடிக்கும் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் மாமுண்டி, செந்தில் ஆகியோர்களை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். புகார்தாரர் முருகேசனை தெரியும். விபத்தில் இறந்து போன சரவணன், ராஜேஷ் ஆகியோர்களை தெரியும். சுமார் 8 வருடங்களுக்கு முன்னால் நானும் மாமுண்டி, செந்தில் ஆகியோர்கள் ரங்கநாதபுர பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தோம். அப்பொழுது இரவு சுமார் 7.30 மணியளவில் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் எனது அக்கா மகன் ராஜேஷிற்கும் சரவணனுக்கும் விபத்துஏற்பட்டு கூட்டமாக இருக்கிறது என்று தகவல் சொன்னார். ஆதரவற்ற குழந்தைகள் படிக்கும் பள்ளி அருகே விபத்து ஏற்பட்டதாக என்னிடம் தகவல் சொன்னார். தகவல் கிடைத்து நான், எனது அக்கா காவேரி, மாமுண்டி மற்றும் செந்தில் ஆகியோர் சம்பவ

இடத்திற்கு சென்றோம். நாங்கள் போய் பார்த்த போது சரவணனுக்கு பேச்சுமூச்சு இல்லை. சரவணன் முட்டி போட்டு தலையை தரையில் சாய்த்து இருந்தார். மூளை பகுதி வெளியே வந்திருந்தது. நான் போய் பார்த்த பொழுது ராஜேஷிற்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. காயம்பட்ட இராஜேஷை இருசக்கர வாகனம் மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கும், தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கும் அனுப்பி வைத்தனர். சிகிச்சை பலனின்றி ராஜேஷ் இறந்துவிட்டார். விபத்து சம்மந்தமாக மறுநாள் போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)</u>

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனது அக்காவைத் தான் விசாரித்தனர்.

<u>மறுவிசாரணை :– இல்லை</u>

**ஒப்பம்/– கி. முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**